ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

02.10.2025

1. ஞானவேலே ஞானச்சுடரே
ஞானிகள் கூட்டம் மிகுந்தநல்
ஞானசபையாம் பிரணவக்குடிலை
நம்பிக்கை வைத்து உலகோர் வர

2. வருகவே ஞானிகள் ஆவரென
வரம் தந்து அரங்கமகானும்
குருவார விசுவாவசு நங்கை திங்கள்
குறைவிலா சூல குருவார அருளாசியை

3. ஆசிதனை மக்கட்கு உரைப்பேன்
அறம் வளர்க்கும் என் சபையில்
ஆசி தந்து முருகப்பெருமான் தானும்
ஆட்சிபுரிய தொண்டர் படைகளே

4. படைகளெல்லாம் அடிபணிந்து
பரோபகாரம் எனும் தத்துவ
படைகளாக ஒன்று சேர்ந்து
பசிபிணி எனும் மக்களின்

5. மக்களின் வினைகளை போக்கிட
மாதரும சேவை ஆற்றிட
ஆக்கமுடன் அரங்கன் வகுத்த
அன்னதான அனுதின சேவையை

6. சேவையை ஆதரித்து பொருளுதவி
செய்துமே உதவி வர
அவணியெங்கும் கிளைகளாகவே
அரங்கனென் தரும சாலைகள் பெருக

7. பெருகவே உலக மக்களிடை
பசி பிணித் துன்பம் விலகி
வறுமை கட்டம் இல்லாதபடி
வளமான வாழ்வு தரமாகி

8. ஆகியே ஞானிகள் வழிமுறையை
அவரவரும் பின்பற்றி நன்கு
மகிழவே ஞானவான்களாக
மண்ணுலகை மாற்றும் வண்ணம்

9. வண்ணமுடன் ஆறுமுகன் அருள
வாசிவசம் காய சித்திகளும்
எண்ணம் வழி செயல் வழி
எல்லாம் தூய்மை கண்டிட

10. கண்டிட ஞானிகள் ஆகி
கலியுகம் ஞானயுகமாகிட
தொண்டாற்றும் படைகளாக
தேசிகன் என் ஆசிபட யாவரும்

11. யாவரும் சிறப்பர் உலகினில்
என் பலம் உலகமே அறிய
அவணியில் வேலவனார் ஆட்சி
ஆற்றல்பட வந்து மாற்றம் காணும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி